பட்டினமும் சூழலும் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 18 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 27ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 20 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இன் பிரகாரம் காசுப்பாய்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் படியான வங்கி மீதி முறையே ரூபா 952,509 மற்றும் ரூபா 316,334 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றில் அத்திகதியில் உள்ளவாறான வங்கி மீதியாக முறையே ரூபா 924,002 மற்றும் ரூபா 644,591 காட்டப்பட்டதனால் வங்கி மீதி ரூபா 299,750 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் பதிவேட்டின் படி ஊழியர் கடன் மீதி ரூபா 4,776,097 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றில் அத்திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 6,753,993 ஆக காட்டப்பட்டதனால் ஊழியர் கடன் மீதி ரூபா 1,977,896 தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டுக்கான தமிழ் சிங்கள புத்தாண்டு விளையாட்டுப் போட்டியின் போது பரிசில்கள் வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 577,650 பெறுமதியான பொருட்கள் மூலதன செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித வைப்பு பதிவேட்டின் படி மீதி ரூபா 16,099,156 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றில் அத் திகதியில் உள்ளவாறான மீதியாக ரூபா 14,627,886 தொகை காட்டப்பட்டதனால் ரூபா 1,471,270 தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010ஆம் ஆண்டிற்கு முன்னர் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 309,702 மொத்த தொகையான முற்பணங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) 2010ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,907,786 மொத்த தொகையான முற்பணங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) ரூபா 3,203,295 கூட்டுத் தொகையான அரசிறைகள் அறவிடப்படாது ஏழு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்றது. இதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இம்மீதி நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டு வருகின்றது.

(ஈ) ரூபா 624,723 கூட்டுத் தொகையான பதினான்கு சில்லறைக் கடன் கொடுத்தோர் மீதிகள் கொடுத்து தீர்க்கப்படாது ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்றன.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| கடன் கொடுத்தோர் | 701,048 | கடன் கொடுத்தோர் பேரேடு |
| நானாவித வைப்புக்கள் | 14,627,886 | காலப்பகுப்பாய்வு |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதிகள் | |
| அத்தியாயம் ஐஐஐ இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம்

| | |
|---|---|
| (ை) பிரிவு 880 | காசு மற்றும் களஞ்சியம் தொடர்பாக நிர்வாக ரீதியாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களிடம் இருந்து அரச ஊழியர்கள் பிணை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 612 இன் பிரகாரம் பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |

(இ) கிழக்கு மாகாண நிதி ஒழுங்கு விதி

---

| | |
|---|---|
| விதி இலக்கம் 237 | ஒரு வருடத்திற்கு முன்னர் சபையால் வழங்கப்பட்ட ரூபா 21,375 கூட்டு மொத்த பெறுமதியான எட்டு காசோலைகள் பணமாக மாற்றுவதற்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத போதிலும் அவை தொடர்பாக உரிய ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் செயற்பாடுகள் ரூபா 9,402,844 செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 5,423,824 தொகையான வருமானத்திற்கு மிகையான செலவினமாக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா. 14,826,668 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளவாறான வருமானம், வருமான நிலுவை என்பன

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திரண்ட நிலுவை 31.12.2014 |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகளும் வரிகளும் | 8இ970 | 8இ241 | 2இ658 |
| வாடகைகள் | 1இ580 | 2இ015 | 546 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 11இ704 | 9இ449 | - |
| ஏனைய வருமானம் | 6இ835 | 10இ823 | - |
| | 29இ089 | 30இ528 | 3இ204 |

### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 2,658,384 கூட்டு மொத்தமான வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதிவரை நிறுவப்பட்டுள்ள 08 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணங்கள்

அறவிடப்படாததால் மீளாய்வாண்டின் இறுதிவரை சபை ரூபா 255,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திடமிருந்து 2014 திசெம்பர் 31இல் கிடைக்கவேண்டிய ரூபா 14,494,070 தொகையினை மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 முத்திரைக் கட்டணம்

2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,435,235 தொகையினை பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) பிரமாண அடிப்படை நிகழ்ச்சித் திட்டத்தின கீழ் சேதனக் கூட்டுப் பசளை தயாரிப்பதற்காக 2013 யூலை 02 ஆந் திகதி 158 கொள்கலன்கள் ரூபா 498,268 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் இவற்றில் ரூபா 331,127 பெறுமதியான 105 கொள்கலன்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படமால் 2015 யூன் 30 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 23,515.530 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2012 செத்தெம்பர் 26 ஆம் திகதி சபைக்கு கையளிக்கப்பட்ட வெள்ளைமணல் சந்தையை 2015 யூன் 30 ஆந் திகதி வரை மக்களின் பயன்பாட்டிற்கு பாரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் வாசகர்களுக்கு வழங்கப்பட்ட 3,196 நூலகப் புத்தகங்களை வாசகர்களிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தகாரர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 356,723 தொகையான பிடித்து வைத்தல் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நானாவித வைப்புக் கணக்கில் இடப்பட்டுள்ளது.

(உ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 08 வாகனங்கள் ஒன்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. ஒப்பந்தக் நிர்வாகம்

(அ) சந்தைக்கட்டிட நிர்மாணம்

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,505,339 கிரயத்தில் சந்தைக்கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக சபையினால் 2011 திசெம்பர் 12 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) உடன்படிக்கையின் பிரகாரம் இக்கட்டடம் 03 மாத காலத்தினுள் பூர்த்தி செய்யப்படவேண்டிய போதிலும் 06 மாத கால தாமதத்தின் பின்னர் 2012 செப்தெம்பர் 26 ஆம் திகதியே நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 12 கடைகளைக் கொண்ட இச்சந்தைக் கட்டடத்தின் தளத்திற்கு கொங்கிறீட் இட்டு மெருகுபடுத்துவதற்கு ரூபா 94,998 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய நியமத்தின் பிரகாரம் கொங்கிறீட் இடப்படாமையால் தளம் முழுவதும் வெடித்தும் கீழிறங்கியும் காணப்பட்டமை 2015 யூன் 30 ஆம் திகதி மேற்கொண்ட கணக்காய்வு பரிட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(iii) சந்தையின் இரண்டு நுழைவாயில்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் இரண்டு கதவுகள் கொண்ட நான்கு வாயில் கதவுகள் பொருத்துவதற்காக ரூபா 56,000 செலுத்தப்பட்ட போதும் ரூபா 28,000 பெறுமதியான இரண்டு கதவுகள் மாத்திரமே பொருத்தப்பட்டிருந்தமை 2015 சனவரி 02 அன்று மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டது.

5. மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 2014.12.31 இல் உள்ளவாறு<br>உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | 01 | -- | -- |
| உதவியாளர்கள் | 27 | 23 | 04 | -- |
| சிற்றூழியர்கள் | 61 | 45 | 16 | -- |
| ஏனையவர்கள் | -- | 70 | -- | 70 |

ஒரு முகாமைத்துவ உதவியாளர் பதவியும், ஒரு வெற்றிடமும் பதினாறு சிற்றூழியர் பதவிகளும் கடந்த 05 வருட காலமாக நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளன.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 39மூ தொடக்கம் 93மூ வரையான முரணகள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

அ. கணக்கீடு
ஆ. நிலையான சொத்துக் கட்டுப்பாடு
இ. முற்பணங்களின் அறவீடு
ஈ. வருமான சேகரிப்பு
உ. ஒப்பந்த நிர்வாகம்